ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1771/24 - 2012 අගෝස්තු මස 17 වැනි සිකුරාදා - 2012.08.17

*1771/24 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*நியதிச் சட்டமுறையான விதிப்பு இல. 4625*

*விசேட இல. நு/44.*

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை விதிப்பு*

*ரிகிள்ளகஸ்கட, ரிகிள்ளகஸ்கட எனும் தோட்டத்தில் அமைந்துள்ளதும் சீ/ச குமாரகே தோட்டக் கம்பெனியிற்கு உரித்தாக்கப்பட்ட காணிகள் தொடர்பாக அங்கே பணிப்பாளரினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான உச்ச வரம்புக்குள் உட்பட்ட காணிகளை உடைமைகொண்டுள்ளவராக திருமதி அக்னஸ் மாகரிடா நனியெல் சொய்சா மட்டுமே இருந்ததாலும் தற்போது அவர் காலமாகி உள்ளதால் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த ஆணைக்குழுவினால் நியதிச்சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகவிருந்த கமத்தொழில் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதி வழங்கவேண்டிய பகுதியை நிர்ணயித்து அவரின் மரணசாதனச் சொத்துக்கு சட்டமுறையானதொரு விதிப்பு விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியதிச்சட்ட முறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப்பகுதிகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

*சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா,*
*தலைவர்,*
*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.*

*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,*
*சீ 82, ஹெக்டர் கொபபேகடுவ மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2012, ஓகத்து 17.*

**அட்டவணை**

*1. மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரன்கெத பிரதேச செயலாளர் பிரிவின் தியதிலக கோறளை சிறு பிரிவின் ரிகிள்ளகஸ்கட 492/ஏ இலக்க கிராம அலுவலர் பிரிவின், ரிகிள்ளகஸ்கடவும், வளவலகமவும் எனும் கிராமங்களில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட ஆரம்ப வரைபட இல. நு/2771 இன் காட்டப்பட்டுள்ளதுமான ரிகிள்ளகஸ்கட எனும் காணியில் 49 ஏக்கர் 1 றூட் 35.74 பேர்ச்சஸ் அளவு கொண்ட 02, 04, 06, 07, 10, 11, 13, 14, 16, 24 ஆகிய இலக்க காணித்துண்டுகளும் அதனுள்ளடங்கிய சகலதும்.*

*8 - 932*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.